இறையரசு மலர

"அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள்"
யோவான்" 2:5

# DIOCESAN NEWS LETTER

## VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 19 NOVEMBER - 2023 No. 11**



இறையரசு மலர

REGNUM CHRISTI

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

(FOR PRIVATE CIRCULATION ONLY)

Vol. 19 NOVEMBER - 2023 No. 11


**Dear Fathers, Brothers and Sisters**

**If we have been united with him in a death like his, we will certainly be united with him in a resurrection like his – Rom. 6:5**

Our Holy Mother Church celebrates November 2 as All Souls Day every year. Dia de los Muertos, or the Day of the Dead, acknowledges the symbiotic relationship of life and death. All Saints' Day on Nov. 1 is dedicated to the saints of the church, who are in heaven. All Souls Day on 2 is set aside for those who have died, but have yet to attain heaven.

According to Roman Catholic Faith All Saints Day is a day to remember all saints and martyrs during Christian history and All souls Day (*Commemoratio Omnium Fidelium Defunctorum*) is a day for commemoration of all the faithful departed, those baptized Christians who are believed to be in **purgatory** because they died with the guilt of lesser **sins** on their **souls**.

**Short history of All Souls Day :**

From antiquity certain days were devoted to intercession for particular groups of the dead. The history goes beyond to the time of St. Isidore of Spain who started remembering all souls in Purgatory on Monday after the Feast of Holy Spirit. This Holy practice was prevalent only among the Hermits in their Hermitage. Later it was St. Odilo, the abbot of Cluny in the 10 century who observed Nov. 2 as the day of all the departed Monks all over his Monasteries. This Holy practice was later adopted by the Western Church and till today it is observed in the Holy Catholic Church.

**Why to pray for the dead?**

We need to pray for the departed souls for the following three reasons :

1. We pray for the deceased believing that death is not the end but the beginning of eternal life.

2. The prayers of the faithful on earth will help cleanse these souls in order to fit them for the vision of God in heaven, and the day is dedicated to prayer and remembrance.

3. Through prayer, intercessions, alms and visits to cemeteries we gain indulgences.

**Why 3 masses on All Souls Day?**

Due to the extensive number of deaths, destroyed churches and unceasing warfare, in 1915 Pope Benedict XV granted that all priests celebrate three Masses on All Souls Day: one for a particular intention of the day, one for all the faithful departed and one for the intentions of the Holy Father.

Praying for the dead is a very traditional and good spiritual practice of our faith. The Holy Catholic Church has dedicated the whole month of November to pray for the departed souls in Purgatory. Let us therefore remember all our beloved ones and abandoned souls in Purgatory gratefully and pray for them to get God's mercy through offering Holy masses, prayers and alms and visiting their cemeteries.

As it is already announced our Clergy Annual Retreat is going to take place from **Nov. 19 Sunday evening to 25 Saturday morning at Cluny Prashant Vanam in Kalapet, Pondicherry.** I earnestly ask all our priests to attend the retreat without fail. Retreat is the time to come as one family to listen and meditate together, to pray and celebrate the Holy mass together. It is also the time to reflect our past, repent for our past sins and failures and reconcile with God and with our own brother priests. Therefore let us come with joy and eagerness to segregate ourselves for a week from all other worldly distractions and disturbances unite ourselves with the Lord and come back with hallow and glowed-up.

On Nov. 6 the new presbytery at Japthikarani parish was blessed and opened. I thank Mr. Mariaraj, the engineer, Propaganda Fide, Rome and Fr. A. Stephen, the parish priest.

I wish all the priests, religious who celebrate their Feast day, Birth day and ordination days in this month. May the good Lord bless them abundantly and our Mother Mary intercedes for them and brings them choicest blessings. Kindly remember me and the diocese in your daily prayers and Holy masses.

God bless,
Yours in Christ Jesus,



**Very Rev. Msgr. I. John Robert,**
Diocesan Administrator

## ADMINISTRATOR'S PROGRAM

| | | |
|---|---|---|
| 02 | M | All Souls Day, Cathedral – Vellore |
| | E | Mass, Old Town |
| 04 | | Feast Mass, St. Charles Borromeo, Ammur |
| 06 | | Blessing of New Presbytery, Japthikarani |
| 10 | | Popular Retreat, Gengapattu |
| 11 | | CRI Special Meeting, Vellore |
| 12 | | Renovated Church Blessing, Old Town |
| 13-15 | | TNBC Meeting, Coimbatore |
| 16 | | Wedding, Chennai |
| 18 | | Golden Jubilee Celebration, DM Convent, Thanipadi |
| 19 | | St. Vincent De Paul - Annual Day, Chetpet |
| 19-25 | | Priests Annual Retreat, Pondicherry |
| 26 | | Consecration of Bishop Elect, Sivagangai |
| 30 | | Silver Jubilee Celebration, Bangalore |

**PRIESTS ANNUAL RETREAT**

The Annual Retreat for the clergy begins on Sunday November 19 evening and ends on Saturday 25 morning at **Cluny Prashant Vanam in Kalapet, Pondicherry Retreat Centre.** All are expected to attend the retreat without fail. The preacher is Rev. Msgr. John Kulandai, the former Vicar General of Diocese of Kottar. Kindly bring your Bible and Breviary along with two mass diaries (Personal and Parish). Anyone wants to be absent for special reason has to get permission from the Administrator.

Three Important Notes :

1. All are expected to bring your own toilet and stationery things.
2. Kindly cooperate to accommodate yourself within the given arrangements.
3. All are expected to come to Pondicherry on your own.

**PRIESTS' TRANSFERS**

**Parishes**

| | | |
|---|---|---|
| 1. Cheyyar | - | Rev. Fr. A. Sudharson Antony |
| 2. Parasur | - | Rev. Fr. F. Felix Kamal |

**Assistants**

| | | |
|---|---|---|
| 1. Tiruvannamalai | - | Rev. Fr. S. Velankanni |
| 2. Vettavalam | - | Rev. Fr. J. Amuthan |

**Deacons**

| | | |
|---|---|---|
| 1. Arakkonam | - | Dn. S. Maria Louise Raj |
| 2. Vandavasi | - | Dn. A. Anish |

**Commissions**

| | | |
|---|---|---|
| 1. Youth Commission | - | Rev. Fr. A. Jayaseelan |
| 2. SC / ST Commission | - | Rev. Fr. M. Devanesan |
| 3. KVI (கிறிஸ்துவ வாழ்வுரிமை இயக்கம்) | - | Rev. Fr. A. Devasagayam |

**திருத்தந்தை பிரான்ஸிசின் அமைதி மன்றாட்டு**

ஆண்டவராகிய இயேசுவே, அனைத்து பிரிவினைக்கும் தீமைக்கும் ஊற்றாயிருக்கும் பாவத்திலிருந்து எங்களை விடுவிக்கும் உமது திருச்சிலுவையை வணங்குகிறோம்; தோல்வி மற்றும் மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்து மனிதனை மீட்கும் உமது உயிர்த்தெழுதலை நாங்கள் அறிவிக்கின்றோம்; உமது அரசின் நீதி, மகிழ்ச்சி மற்றும் அமைதியின் நிறைவை அருளும் மாட்சிமிகு உம் வருகையை எதிர்நோக்கியுள்ளோம்.

ஆண்டவராகிய இயேசுவே, உமது மாட்சி நிறைந்த பாடுகளால், வெறுப்பிலும் தன்நலத்திலும் சிறைப்பட்ட எம் இதய கடினத்தின்

மேல் வெற்றி கொள்ளும்; உமது உயிர்பின் ஆற்றலால் அநீதி மற்றும் தவறான நடத்தையின் பொருட்டு துன்புறுவோரை காப்பாற்றும்; உமது வருகையின் உறுதியினால், மரணத்தின் கலாச்சாரத்தை எதிர்த்து, வாழ்வின் வெற்றியை ஒளிபெறச் செய்யும்.

ஆண்டவராகிய இயேசுவே, துன்பத்திற்குள்ளான பல மாசற்ற குழந்தைகள், வயது முதிர்ந்தோர் மற்றும் துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களின் வேதனைகளை உமது திருச்சிலுவையுடன் இணைத்தருளும்; தவறிழைக்கப்பட்டு, சுதந்திரம் மற்றும் கண்ணியம் பறிக்கப்பட்டு ஆழமான காயங்களால் துன்புறும் அனைவரையும் உமது பாஸ்கா விடுதலையின் ஒளியில் மூழ்கச்செய்யும். நிலையற்று வாழும் நாடுகடத்தப்பட்டவர்கள், அகதிகள் மற்றும் வாழ்வில் மகிழ்ச்சி இழந்தவர்கள் ஆகியோர் உமது அரசின் நீடித்த நிலைத்தன்மையை அனுபவிக்க அருள்புரியும்.

ஆண்டவராகிய இயேசுவே, போரிட்டுக்கொண்டிருக்கும் மக்கள் மீது உமது திருச்சிலுவையின் நிழல் படியச்செய்யும்; ஒப்புரவு, உரையாடல், மன்னிப்பு ஆகிய வழிகளை அவர்கள் கற்றறிவார்களாக; குண்டுவீச்சுகளால் மிகவும் மனம் சோர்ந்த மக்கள் உமது உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியை அனுபவிப்பார்களாக. போரிடும் நாடுகளை அழிவிலிருந்து மீட்டருளும்; சிதறுண்ட உம் பிள்ளைகளை உம் பரிவான அரசாட்சியின் கீழ் மீண்டும் இணைதருளும். புலம்பெயர் நாடுகளில் உள்ள கிறிஸ்தவர்களை நிலைநிறுத்திஇ அவர்களுக்கு நம்பிக்கை மற்றும் அன்பின் ஒற்றுமையை வழங்கும்.

ஓ! கன்னி மரியே, அமைதியின் அரசியே, சிலுவையின் அடியில் நின்றவளே, எம் பாவங்கள் அனைத்திற்கும் உம் திரு மகனிடம் இருந்து மன்னிப்பு பெற்றுத் தாரும்; அவரது உயிர்தெழுதலின் வெற்றியில் ஒருபோதும் ஐயப்படாத நீர், எங்கள் நம்பிக்கையையும் எதிர்நோக்கையும் நிலைநிறுத்தும்; மாட்சியில் வீற்றிருக்கும் அரசியே, பணிவிடையின் மகத்துவ பாதைகளையும், அன்பின் மாட்சியையும் எமக்கு கற்றுத்தாரும்.

அமைதியின் கடவுளாம் ஆண்டவரே, எங்கள் மன்றாட்டை கேட்டருளும்! எங்களது ஆற்றல்களாலும், போராயுதங்களின் பலத்தினாலும் எங்களிடையே நிலவும் முரன்பாடுகளுக்கு தீர்வுகள் காண பலமுறை மீண்டும் மீண்டும் முயற்சிகள் செய்துள்ளோம்.

எத்தனை தருணங்களில் எதிர்ப்பும் இருளும் அனுபவித்திருக்கின்றோம்; எவ்வளவு குருதி சிந்தப்பட்டிருக்கிறது; எத்தனை உயிர்கள் சிதறடிக்கப்பட்டு, எத்தனை எதிர்நோக்கங்கள் புதைக்கப்பட்டிருக்கின்றன… எங்கள் முயற்சிகள் அனைத்தும் வீண்ணானவைகளாயின.

ஆண்டவரே, இப்பொழுது நீர் எங்களுக்கு உதவ வாரும்! எங்களுக்கு அமைதியருளும், அமைதியை எங்களுக்கு கற்றுத்தாரும். 'இதற்கு மேலும் போர் வேண்டாம்' 'போரினால் அனைத்தையும் இழந்தோம்', என்று துனிவுடன் எடுத்துரைக்க எங்கள் கண்களையும் இதயங்களையும் திறந்தருளும். அமைதியை அடைய உறுதியான செயல்பாடுகளை எடுப்பதற்கு தைரியத்தை எங்கள் இதயங்களில் விதைத்தருளும். ஆண்டவரே, ஆபிரகாமின் கடவுளே, இறைவாக்கினரின் கடவுளே, அன்பின் இறைவா, நீரே எம்மை படைத்தீர்; எம்மை சகோதர சகோதரிகளாக வாழ அழைக்கின்றீர். அமைதியின் கருவிகளாக இருக்க தினமும் எங்களுக்கு ஆற்றலை அருளும்; எங்கள் பாதையில் வரும் அனைவரையும் எங்கள் சகோதர சகோதரிகளாக காணச் செய்யும்.

போராயுதங்களை அமைதியின் கருவிகளாகவும், எங்கள் பயத்தின் நடுக்கங்களை உறுதியான நம்பிக்கையாகவும், சண்டை சச்சரவுகளை மன்னிப்பாகவும் மாற்றியமைக்க எங்களை வேண்டிநிற்கும் குடிமக்களின் குரலை உணரச் செய்யும்.

பொறுமையும் விடாமுயற்சியும் கொண்டு, உரையாடி ஒப்புரவை நாடிநிற்க, எதிர்நோக்கு என்னும் தீபத்தை எம்முள் எரிந்துகொண்டிருக்கச் செய்யும். இவ்வழியாக, இறுதியில் அமைதி வெற்றி பெற்று நிலைபெறுவதாக; ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் இதயத்திலிருந்தும் 'பிரிவு', 'வெறுப்பு', 'போர்' ஆகிய சொற்கள் வெளியேற்றப்படுவதாக. ஆண்டவரே, வன்மையை எங்கள் நாவுகளிலிருந்தும் கைகளிலிருந்தும் தவிர்பீராக. எங்கள் அனைவரையும் இணைக்கும் சொல் "சகோதரன்', 'சகோதரி' என்றும், எங்கள் வாழ்க்கையின் வழி 'சாலோம்', 'சமாதானம்', 'சலாம்' என்றும் எப்பொழுதும் இருப்பதாக. ஆமென்.

**இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை**
**ஒன்றிப்பின் ஞாயிறு டிசம்பர் 3, 2023**
**(திருவருகை காலம் முதல் ஞாயிறு)**

இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் பேராயர்கள்/ ஆயர்கள்/ குருக்கள்/ திருத்தொண்டர்கள் / துறவறத்தார்/ வேதியர்கள் மற்றும் பொதுநிலையினருக்கு.

இயேசு கிறிஸ்துவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே!

1. புதிய திருவழிபாட்டு ஆண்டைத் திருவருகைக் காலத்தில் துவங்கும் போது நம்பிக்கை, மகிழ்ச்சி மற்றும் ஊக்கத்தின் உணர்வால் நாம் நிரப்பப்படுவோமாக. நம்மோடு கடவுள் பகிர்ந்து கொண்ட நிபந்தனையற்ற அன்பை வெளிப்படுத்தும் மனுவுருவாதலின் மறைபொருளை கொண்டாடும் போது, அன்பே நற்செய்தியின் இதயம், என்ற கிறிஸ்துவின் போதனையோடும் கடவுளின் மீட்பைப் பெறுவது என்பது கடவுள் இயேசு கிறிஸ்துவில் வெளிப்படுத்திய நம்மீது கொண்ட எல்லையற்ற அன்பில் நம்மை முற்றிலும் ஆட்கொள்வதே என்பதிலும் நாம் எதிரொலிப்போமாக.

2. ஆண்டு முழுவதும் மிகவும் சிறப்பாக திருவருகைகாலம் மற்றும் கிறிஸ்து பிறப்பு காலங்களில் நமது சகோதர சகோதரிகளுடன், குறிப்பாக ஏழைகள் மற்றும் தேவையில் உள்ளோரிடம் கடவுளின் அன்பைப் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். தனது அனைத்து திருப்பணிகள் மூலமாகவும், இந்தியத் திருச்சபை எல்லா இடங்களிலும் நற்செய்தியின் மகிழ்ச்சியை தொடர்ந்து பரப்ப முயற்சிக்கிறது. ஆனால் சமூக பொருளாதார வரம்புகள் தனது பணியை நிறைவேற்றுதற்கான பாதையின் தடைகளை ஏற்படுத்துகின்றன. மணிப்பூரில், வாழ்க்கை சீர்குலைந்துள்ளது மற்றும் நமது சகோதர சகோதரிகளில் பெரும்பாலோர் தங்கள் வீடுகளையும் வழிபாட்டுத் தலங்களையும் இழந்தவர்களாய் இடம் பெயர்ந்துள்ளனர். நமது சகோதர சகோதரிகளில் பலர் ஏழ்மையான மற்றும் மனதாபிமானமற்ற சூழ்நிலையில் வாழ்கிறார்கள். திருப்பலியை நிறைவேற்றுவதற்கும் வழிபாடுகள் நடத்துவதற்கும் சரியான இடம் இல்லாமல் உள்ளனர். கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள பெரும்பான்மையான நமது மறைப்பணியாளர்கள் பலர் மிகக் குறைந்த வசதிகளுடன் இறைபணி செய்கிறார்கள்.

3. மீண்டும், திருவருகை காலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று ஒன்றிப்பின் ஞாயிறை நினைவு கூறும் வேளையில் அதை மகிழ்வுடன் கொண்டாடி குறிப்பாக நமது நாட்டின் தொலைதூரத்தில் உள்ள நமது சகோதர சகோதரிகளுக்கு உதவுவதற்காக தங்கள் ஜெபங்களையும் வளங்களையும் பகிர்ந்து கொள்வதில் தாரளமாக இருக்குமாறு நமது எல்லா நம்பிக்கையாளர்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுப்போம். அதன் வழியாக அவர்களும் கடவுளின் அன்பை அனுபவிக்க முடியும்.

4. ஒன்றிப்பு (Communio) இந்திய கத்தோலிக்க ஆயர்கள் பேரவை (CCBI) 2018 ஆம் ஆண்டு முன்னெடுத்த சிறந்த முயற்சி. இதன் பயனாக கிராமப் புறங்களிலும் மறைபரப்புத் தளங்களிலும் மேய்புப்பணி ஆற்றுகின்ற மறைமாவட்டங்கள் மற்றும் துறவற சபைகளுக்கு உதவிடவும் துணைசெய்யவும் தக்கவைக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. “செபத்தில் இதயங்கள்! மறைப்பணியில் மனங்கள்! தோழமையில் கரங்கள்!” என்பது தான் ஒன்றிப்பின் (கம்யூனியோ) தொலைநோக்காகும்.

இதன் நோக்கங்கள் பின்வருமாறு :

i. தேவையிலிருக்கும் நமது சகோதர சகோதரிகளுடன் தோழமையை வெளிப்படுத்த கத்தோ◌க்க நம்பிக்கையாளர்களிடையே பகிர்தல் கலாச்சாரத்தை தட்டியெழுப்புவது. ii. நம்பிக்கையாளர்கள் மறைப்பணிக்காகவும் மறைப்பணியாளர்களுக்காகவும் இறைவேண்டல் செய்வதையும் உதவுவதையும் ஊக்கப்படுத்துவது மற்றும் அர்ப்பண வாழ்விற்கான இறையழைத்தலை வளர்த்தெடுப்பது. iii. மறைப்பணித் தளங்களில் தன்னார்வலர்களாக தொண்டாற்றிட பொதுநிலையினரை தூண்டியெழுப்புவது. iv. நம் இறைமக்களை மறைப்பணியார்வமிக்க சீடர்களாக்குவதற்கான உருவாக்கத்தை வளர்த்தெடுப்பது. ஒன்றிப்பு என்பது நம்மிடமிருந்து, நமக்காக, நம்மால் உள்ளது.

5. இந்த ஒன்றிப்பிலும், ஒன்றிப்பு வழியாகவும் நற்செய்தி அறிவிப்பு நிகழ்வுகளுக்காகவும் மறைக்கல்விக்காகவும் பொதுநிலையிரின் உருவாக்கத்திற்காகவும் கருத்தரங்கு மற்றும் பயிற்சி வகுப்புகளுக்கும், சிற்றாலயங்கள் மற்றும் குருக்கள் தங்குமிடம் கட்டுவதற்கும் மேலும் பல்சமய உறவு சார்ந்த முயற்சிகளை முன்னெடுக்கவும் நாம் ஆரம்பித்துள்ளோம்.

இன்று இந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுமல்ல ஒவ்வொரு நாளும் ஒன்றிப்பு தினத்தை கொண்டாட உங்களை அழைக்கிறோம். ஒன்றிப்புடன் நீங்கள் ஒத்துழைக்க 5 வழிகள் உள்ளன. i. ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக நன்கொடை அளித்திடுங்கள். ii. உங்கள் இறுதி விருப்ப ஆவணத்தில் (உயிலில்) குறிப்பதன் மூலம் இதற்கான மரபுரிமையை விட்டுச் செல்லுங்கள். iii. ஒரு குரு மாணவர் அல்லது துறவற பயிற்சி மாணவரின் உருவாக்கத்திற்கு கொடையாளராகுங்கள். iv. மறைப்பணிக்கு உதவிடுங்கள். v. உங்கள் நேரத்தையும் ஆற்றலையும் கொடுத்து தன்னார்வத் தொண்றாட்டுங்கள். புனிதர்கள் திருநாட்கள் மற்றும் திருத்தந்தையின் செபக்கருத்துக்கள் பற்றிய கானொலி காட்சிகள் வழியாக ஒன்றிப்பு உங்கள் கரங்களையும் இதயங்களையும் வந்தடைகிறது. எங்கள் இணையதளம் வழியாக (www.communio.in) நமது மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆயர்களை அணுகலாம்.

6. உங்களின் பெருந்தன்மைக்காகவும், தாராள கொடை உள்ளத்திற்காகவும் நாங்கள் உங்களுக்கு நன்றி தெரிவிக்கும் இத்தருணத்தில் ஒன்றிப்பின் ஞாயிறை உங்கள் பங்கில், நிறுவனங்களில், துறவற சமூகத்தில், குடும்பத்தில் பின்வரும் வழிகளில் கொண்டாட உற்சாகமூட்டுகிறோம்.

i. ஓன்றிப்பின் ஞாயிறு குறித்த விளம்பர பதாகை அல்லது அதன் இலட்சினை, உங்கள் பங்கு அறிவிப்புப் பலகையில், பங்கின் செய்தி அறிக்கையில், வலைதளப் பக்கங்களில் மற்றும் உங்கள் சுயவிவர முகப்புப் பக்கங்களிலும் இடம்பெறும்படி பார்த்துக் கொள்ளவும். (communio) என்று அனைவரும் பார்க்கவும் கேட்கவும் செய்யலாம். ii. மறைப்பணி மற்றும் மறைப்பணியாளர்களுக்காக செபிக்க அர்த்தம் நிறைந்த திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திடலாம். iii. உங்கள் வளங்கள், நேரம் மற்றும் ஆற்றல் மூலம் ஒன்றிப்பிற்கு பங்களிக்க உறுதிமொழி எடுக்கலாம். இன்றே, இங்கே, இப்போதே தொடங்குங்கள்.

மறைப்பணிகளின் அரசியான புனித கன்னிமரியாவும், அகில உலக திருச்சபையின் பாதுகாவலராம் புனித யோசேப்பும் நமக்காக பரிந்து பேசுவார்களாக.

CCBI General Secretariat, November 1, 2023.

**+ Filipe NeriCardinal Ferrão**

President, Conference of Catholic Bishops of India

Archbishop of Goa and Daman

**+ George Antonysamy**
Vice-President, CCBI
Archbishop of Madras-Mylapore

**+Anil Joseph Thomas Couto**
Secretary General, CCBI
Archbishop of Delhi

குறிப்பு : இந்தியாவில் உள்ள லத்தீன் கத்தோலிக்க திருச்சபையின் 132 மறைமாவட்டங்களின் அனைத்து திருச்சபைகள், துறவற சபைகள் மற்றும் நிறுவனங்களில் இந்தச் சுற்றறிக்கையை ஓன்றிப்பின் (கும்யூனியோ) ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 3, 2023) அன்று படித்து அதன் உள்ளடக்கங்கள் விளக்கப்பட பரிந்துரைக்கப்படுகிறது.

## கடவுளின் மக்களுக்கு ஆயர்கள் மாநாட்டின் 16வது சாதாரண முதல் பொது அமர்வின் கடிதம்

என் அன்பு சகோதரிகளே, அருமை சகோதரர்களே,

16வது ஆயர் மாநாட்டின் முதல் பொது அமர்வின் செயல்பாடுகள் நிறைவடையும் இந்நேரத்தில், இந்த அழகிய வளமூட்டும் அனுபவத்தில் நாம் வாழ்ந்ததை முன்னிட்டு உங்கள் அனைவரோடும் இணைந்து கடவுளுக்கு நன்றி கூற விளைகின்றோம். இந்த ஆசீர்மிகு காலத்தை உங்களுடன் ஆழ்ந்திணைந்து வாழ்ந்தோம். உங்களது எதிர்பார்ப்புகள், கேள்விகள் மற்றும் பயங்கள் யாவற்றையும் உங்களுடன் இணைந்து சுமப்பதில், உங்களது மன்றாட்டுகளின் துணையையும் பெற்றுள்ளோம். இரண்டு வருடங்களுக்கு முன் திருத்தந்தை பிரான்ஸிசின் வேண்டுதலின் விளைவாக, தூய ஆவியாரின் வழிநடத்தலில் ஒருவர் கூட விடுபடாமல் இறைமக்கள் அனைவரும் “இணைந்து பயனிக்க” செவிசாய்த்தல் மற்றும் பகுத்தறிதல் உடனிணைந்த நீடிய செயல்முறைத் திட்டம் இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் நற்செய்தி பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது.

ரோம் நகரில் செப்டம்பர் 30ம் நாள் முதல் நாம் கூடிவந்த அமர்வு இந்த செயல்முறையின் முக்கிய கட்டம். பல வழிகளில் இது முன்பு எப்போதும் இல்லாத புதியதோர் அனுபவமாக அமைந்துள்ளது.

திருத்தந்தை பிரான்ஸிசின் அழைபிற்கிணங்கி முதன்முறையாக, ஆண்களும் பெண்களும் தம் திருமுழுக்கின் வழியாக பெற்றிருக்கும் தகுதியை முன்னிட்டு ஆயர்களின் மாமன்றத்துடன் ஒன்றாக அமர்ந்து மட்டுமன்றி அவர்களோடு இணைந்து தேர்தல் செயல்முறைகளிலும் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருந்தனர். நமது இருவகை அழைப்பின் ஒற்றுமை நிறைவிலும், நமது தனிவரம் மற்றும் பணி செயல்பாடுகளிலும் நாம் இறைவார்த்தைக்கும் பிறரது அனுபவங்களுக்கும் இணைந்து செவிமடுத்துள்ளோம். தூய ஆவியாரில் உரையாடுதல் என்ற முறையில் நாம் உலகின் அனைத்து கண்டங்களில் உள்ள சமூகங்களின் செல்வத்தையும் வறுமையையும் பகிர்ந்து தூய ஆவியார் இன்றய திருஅவைக்கு எடுத்துச் சொல்வதை ஆய்ந்தறிய முயன்றோம். இவ்வாறு நாம் மேற்கு (லத்தீன்) மரபு மற்றும் கீழ்திசை கிறிஸ்தவ மரபுகளுக்கு இடையே உள்ள பரஸ்பர பரிமாற்றங்களின் சிறப்பினை உணர்ந்தோம். மற்ற பல திருஅவைகள், மற்றும் துறவர சபைகளிலிருந்து பங்குகொண்ட சகோதர சகோதரியரின் பங்களிப்பு நம் உரையாடல்களுக்கு ஆழமான வளமளித்தது.

சிலர் போர் நடக்கும் நாடுகளிலிருந்து வந்து பங்குகொண்டதன் முக்கிய காரணத்தால், நமது ஒன்றுகூடலில் இன்றய சிக்கல்கள் நிறைந்த உலகின் காயங்களுக்கும் முறையற்ற ஏற்றத்தாழ்வுகளுக்கும் இடையே, நம் இதயங்கள் நம் பணிகளில் ஒருவித ஈர்ப்பை உண்டாக்கியது. கொடிய வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் ஜெபம் செய்தோம்; துன்பத்தாலும் ஊழலாலும் கட்டாயப்பட்டு இடம்பெயர்ந்து அபாயகரமான பாதையில் செல்பவர்களை நாம் மறக்கவில்லை. உலகமெங்கும் நீதிக்கும் அமைதிக்கும் குரல் கொடுத்து பணி செய்யும் மக்கள் அனைவருக்கும் நம் உறுதியையும் உடனிருப்பையும் வாக்களித்தோம்.

திருத்தந்தையின் அழைப்பினை முன்னிட்டு நம்மிடையே பரஸ்பர செவிமடுத்தலையும் தூய ஆவியாரின் ஆழ்ந்த உறவை நாடியும் நாம் அமைதிக்கு வேண்டிய இடம் அளித்தோம். துவக்கத்தில் பல்சமய திருவிழிப்பின் போது, சிலுவையில் பாடுபட்ட கிறிஸ்துவை தியானிக்கையில் ஒற்றுமையை முன்னிட்டு நம் தாகம் மேலோங்குவதை நாம் உணர்ந்தோம். 'அவர்கள் ஒன்றாய் இருக்கும் படி' (யோவான் 17:21) தம்மையே உலகின் மீட்புக்காக கையளித்து தம் சீடர்களை தந்தையிடம் ஒப்படைத்த அவருவருடைய ஆட்சி

சிம்மாசனம் உண்மையில் அந்த சிலுவையே. இவ்வுலகமும் அதன் ஏழைகளும் எழுப்பும் அழுகுரலுக்கு செவி சாய்ப்பது எவ்வளவு முக்கியம் என்பதை நம் பணியின் தொடக்கத்தில் திருத்தந்தை நமக்கு நினைவூட்டியதை தொடர்ந்து, கிறிஸ்துவின் உயிர்ப்பு நமக்கு அளித்த எதிர் நோக்கில் உறுதியாய் ஒன்றிணைந்து நமது பொது வீடாகிய உலகை அவரிடமே ஒப்படைத்தோம். "Laudate Deum!" ("கடவுளுக்கே புகழ்!").

ஒவ்வொரு நாளும், மேய்பு மற்றும் நற்செய்தி பணிகளில் மாற்றங்களின் தேவை ஆழமாக இருந்ததை உணர்ந்தோம். ஏனெனில், நற்செய்தியை அறிவிப்பதில் தன்னையே மையப்படுத்த அல்ல மாறாக இவ்வுலகின் மேல் அன்பு கொண்ட கடவுளின் அளவில்லா அன்பிற்கு (காண்க: யோவான் 3:16) பணிவிடை செய்வதற்கே தன்னை கையளிக்க திருஅவை அழைப்பு பெற்றிருக்கிறது. புனித பேதுரு சதுக்கத்தின் அருகில் வீடற்று இருந்தோரிடம், மாமன்றத்தின் போது திருஅவையிடமிருந்து தாங்கள் எதிர்பார்ப்பது என்னதென்ற கேள்விக்கு, அவர்கள் அளித்த பதில்: 'அன்பு!'. நம் ஒன்றுகூடலின் நடுப்பகுதியில், அக்டோபர் 15 அன்று, குழந்தை இயேசுவின் புனித தெரசாவின் பதிவை திருத்தந்தை நினைவுபடுத்தியதற்கு ஏற்ப, இந்த மூவொரு இறை அன்பும், நற்கருணை அன்பும் திருஅவையின் உறுதியான இதயமையமாக இருக்க வேண்டும். நமது ஒற்றுமைகள், வேறுபாடுகள், ஆவல்கள் மற்றும் வினாக்கள் ஆகிவற்றை சுதந்திரமாகவும் தாழ்ச்சியுடனும் தயங்காமல் வெளிப்படுத்த 'நம்பிக்கையே' நாம் அனுபவிக்கும் தைரியத்தையும் உள் சுதந்திரத்தையும் தருகிறது.

மேலும் இப்பொழுது என்ன? அக்டோபர் 2024ல் நிகழவிருக்கும் இரண்டாம் அமர்வை முன்நோக்கியிருக்கும் இம்மாதங்கள், 'மாமன்றம்' என்ற சொல் குறிக்கும் சுறுசுறுப்பும் ஒன்றிய நற்செய்தி பணி ஆர்வமும், அனைவரையும் உறுதியுடன் பங்களிக்க வைக்கும் என்று நாம் நம்புகிறோம். இது சித்தாந்தம் (சிந்தனையியல்) பற்றியதல்ல, மாறாக இது திருத்தூதர் மரபில் வேரூண்றிய ஒரு அனுபவம். இச்செயல்முறையின் தொடக்கத்தில் திருத்தந்தை நமக்கு நினைவுபடுத்தியது போல, 'ஒவ்வொருவரிடமும் அனைவரிடமும் உண்மையான ஈடுபாட்டை தூண்டும் ஒன்றிய மாமன்றத் தன்மையின் உறுதியை வெளிப்படுத்தும் திருஅவையின் செயல்பாடுகளை நாம்

பயிற்றுவித்தாலன்றி, ஒற்றுமையும் பணியும் ஏதோ புலப்படாதவைகளாகும் அபாயமாக அமைந்துவிடும்' (அக்டோபர் 9, 2021). இதில் பல சவால்களும் எண்ணற்ற கேள்விகளும் உள்ளன: முதல் அமர்வின் தொகுப்பு அறிக்கை, நாம் மேற்கொண்ட உடன்பாடுகளை குறிப்பிட்டு, வினாக்களை கோடிட்டு, நம் பணி எவ்வாறு தொடரும் என்பதை சுட்டிக்காட்டும்.

தனது தெளிவுகளில் முன்னேற, ஏழைகள் முதல் அனைவருக்கும் கவனமாக செவிசாய்ப்பது திருஅவையின் முழுமையான தேவை. இதில் அதன் சார்பாக ஒரு மனமாற்றத்தின் பாதை தேவைப்படுகிறது. இது ஒரு புகழ்ச்சியின் பாதையும் கூட: 'தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்.' (லூக். 10:21)! அதாவது சமூகத்தில் பேச்சுரிமை அளிக்கப்படாதவர்களுக்கும் திரு அவையால் கூட தன்னை புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று உணர்வுபவர்களுக்கும் காது கொடுத்து கவனிப்பது; பல வடிவங்களில் செயல்படும் இனவெறியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செவியளிப்பது குறிப்பாக பழங்குடியினரின் கலாச்சாரங்கள் தூற்றப்படும் சில பகுதிகளில். அனைத்திற்கும் மேலாக, இன்றய திருஅவை மனமாற்றத்தின் 'மனநிலையில்' அதன் உறுப்பினர்களால் தவறிழைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு தான் செவிமடுக்கவும், மீண்டும் இது போன்று நிகழாமல் இருக்க உறுதியான அமைப்புகளை எழுப்பவும் கடமைபட்டிருக்கிறது.

தம் திருமுழுக்கின் அழைப்பின் வழியாக புனிதத்திற்கு அழைக்கப்பட்ட பொதுநிலையினர், பெண்கள், ஆண்கள் ஆகிய அனைவருக்கும் திருஅவை செவிசாய்க்க வேண்டும்: பல நிலைகளில் நற்செய்தியை முதன்முறையாக அறிவிக்கும் மறைபோதகர்களின் சான்றுக்கும்; குழந்தைகளின் எளிமை மற்றும் சுறுசுறுப்புக்கும், இளைஞர்களின் உற்சாகத்திற்கும், அவர்களது கேள்விகளுக்கும் முறையீடுகளுக்கும், வயது முதிர்ந்தோரின் கனவுகளுக்கும், ஞானம் மற்றும் ஞாபகத்திறனுக்கும் செவிகொடுக்க வேண்டும். குடும்பங்களுக்கும், அவர்களது கல்வி சார்ந்த கவலைகள் மற்றும் இன்றைய உலகிற்கு

அவர்கள் அளிக்கும் கிறிஸ்தவ சான்றிற்கும் திருஅவை செவிகொடுக்க வேண்டும். பொதுப்பணிகள் ஈடுபடவும், ஆய்ந்து தெளிதல் மற்றும் நிர்வாக அமைப்புகளில் பங்களிக்கவும் விரும்புபவர்களின் குரலை திருஅவை வரவழைக்க வேண்டும்.

மாமன்றத்தின் தெளிவுகளில் தொடர்ந்து முன்னேற, திருநிலை பெற்ற பணியாளர்களின் வார்த்தைகளையும் அனுபவங்களையும் ஒன்றுசேர்க்க திருஅவை குறிப்பாயிருக்க வேண்டும்: அருட்பொழிவு பணி பெற்று திருஅவையாகிய உடலனைத்தின் வாழ்வுக்கு இன்றியமையாத, ஆயர்களின் முதன்மை உடன்பணியாளர்களாய் இருக்கும் குருக்கள்; மிகவும் தாழ்த்தப்பட்டவர்களின் திருஅவை அனைத்தின் பராமரிப்பை தம் பணி வழியாக குறித்துக்காட்டும் திருத்தொண்டர்கள். துறவற வாழ்வை தழுவியோரின் குரலாக வரும் இறை வார்த்தை வழியாக திருஅவை தனக்கே கேள்விகள் எழுப்ப வேண்டும். இது தூய ஆவியாரின் அழைப்பின் ஒப்பற்ற காவல். தாய் திருஅவையானவள் தன் நம்பிக்கையில் பங்கு கொள்ளாதோராயினும். உண்மையை நாடுபவர்களாக, 'உயிர்ப்பின் மறைபொருளோடு இணைந்திருக்க அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் தூய ஆவியார் (மகிழ்ச்சி மற்றும் நம்பிக்கை: Gaudium et Spes 22 5) செயல்படுபவர்களாக இருப்பவர்களுக்கும் நுட்பமான கவனம் செலுத்த வேண்டும்.

'நாம் வாழும் இவ்வுலகம்' அதன் முரன்பாடுகளிலும் நாம் அன்பும் பணிவிடையும் செய்ய அழைக்கப்பட்டிருக்கும் இவ்வுலகம், அதன் பணிகள் அனைத்திலும் திருஅவை அதற்கு துணை நிற்க விரும்புகிறது. மூன்றாம் பொற்காலத்தின் திருஅவையிடமிருந்து கடவுள் விரும்பும் மாமன்றமுறை பாதையும் இதுவே (திருத்தந்தை பிரான்சிஸ், அக்டோபர் 17, 2015). நாம் இந்த அழைப்பிற்கு பதிலளிக்க பயப்பட தேவையில்லை. இப்பயணத்தில் முதன்மையில் செல்பவளாம், திருஅவையின் தாயாகிய மரியாள், நம்மோடு உடன்பயணிக்கின்றாள். மகிழ்ச்சியிலும் கவலையிலும் அவள் தன் மகனை நமக்குக் காட்டி நாம் நம்பிக்கை கொள்ள அழைக்கிறாள். அந்த இயேசுவே, நம் ஒரே நம்பிக்கை!

வத்திக்கான் மாநகர், அக்டோபர் 25, 2023

# PROCURATOR'S OFFICE

## MISSION SUNDAY COLLECTION - 2023

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Thiruvannamalai | 90000 |
| 2 | Bagayam | 41800 |
| 3 | Thenimalai | 10000 |
| 4 | Pulavanbadi | 7000 |
| 5 | Gudiyatham | 35500 |
| | Total | 184300 |

## COMMUNIO INDIA

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Gudiyatham | 10000 |
| | Total | 10000 |

## Manipur Relife Fund

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Vandavasi | 100000 |
| 2 | C.Nammiyandal | 16500 |
| | Total | 116500 |

Thanks for all those who have already remitted the Manipur Relife Fund I request to give those who have not yet given.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

**Mr. S.Justin**
Staff Accountant

## VELLORE & TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

**06.10.2023 :** அன்று மேல்புதுப்பாக்கம் பங்கில் வாழ்வாதாரத்திற்கான வளங்கள், சிறப்பு பயிற்சி சென்னை தேசிய கோல்பிங் இந்தியாவின் உதவியுடன் வேலூர் கோல்பிங் இந்தியா நடத்தினார்கள். இதில் சிறப்பு பயிற்சியாளர்களாக VSSS & TVMSSS இயக்குனர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்களும், VSSS திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக், களப்பணியாளர்கள் திரு. S.சவரிநாதன், திருமதி. P.S.செலின், கோல்பிங் ஒருங்கிணைப்பாளர், திரு. K.யேசுகுமார் மற்றும் MSW மாணவியர்கள் ஆகியோர் பங்கேற்று கலை நிகழ்ச்சி வழியாகவும், செயல்முறை வழியாகவும் வளங்களை கண்டறியும் முறைகளை எளிமையாக விளக்கினார்கள். இதில் 50 கோல்பிங் உறுப்பினர்கள் கலந்துக்கொண்டார்கள். பங்குதந்தை அருட்திரு. A.ஆனந்தராஜ் அவர்கள் பயிற்சிக்கான அனைத்து உதவிகளும் செய்தார்கள்.

**12 - 14.10.2023 :** ஆகிய தேதிகளில் காரிதாஸ் இந்தியாவினுடைய நேஷ்னல் அசெம்பிளி "Fraternity in Humanity : WalkingTogether" என்ற தலைப்பில் Alphonsian Pastoral Institute, Pala, Kerala என்ற இடத்தில் நடைப்பெற்றது. இதில் அகில இந்திய மறைமாவட்ட சமூக சேவை சங்க இயக்குநர்கள் கலந்துக்கொண்டார்கள். நம்முடைய VSSS & TVMSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ், MSW அவர்கள் கலந்துக்கொண்டு தன்னுடைய கருத்துக்களை பகிர்ந்துக் கொண்டார்.

**13.10.2023 :** அன்று அக்சீலியம் கல்லூரியின் மூன்று மாணவியர்களுக்கான பயிற்சி கடந்த மூன்று மாதங்களாக நடைப்பெற்றது. நிறைவு நாளில் மாணவியர்கள் தங்களுடைய கருத்துக்களையும், அதிகமான அனுபவம், திறன்கள் வளர்த்துக் கொண்டதாகவும், மேலும் எதிர்காலத்தில் சமூக ஆர்வலர்களாக மாறுவதற்கு வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவித்தார்கள். இவர்களுடைய

பயிற்சிக்கு உதவிய இயக்குநர், திட்ட மேலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள்.

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

### HUNGER AND DISEASE FUND COLLECTION – 2023

| S.NO. | PARISHES | AMOUNT [RS.] |
|---|---|---|
| 1 | Chetpet | 20,000 |
| 2 | Thenimalai | 3,000 |

குறிப்பு : பசிப்பிணி போக்கும் திட்டத்திற்கு பங்கு தந்தையர்களும், இறைமக்களும் தாராளமாக நிதி வழங்கியமைக்கு நன்றியும் செபமும்.

பசிப்பிணி நிதி வழங்காத பங்குகள் VSSS அலுவலகத்தில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளுமாறும், மேலும் VSSS வங்கி கணக்கு எண். S75020100005952, IFSC Code : BARBOVJVELL - Bank of Baroda, Vellore செலுத்த கேட்டுக்கொள்கிறோம்.

செய்தி தொகுப்பு
திரு. **A.**பேட்ரிக் &
திரு. **T.**இன்பசேகர்
**VSSS & TVMSSS** திட்டமேலாளர்கள்

பேரருட்திரு. **S.**ஜேம்ஸ், **MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**
ஆயர் இல்லம், வேலூர்

## கத்தோலிக்க மேய்ப்புபணி நிலையம்

**பங்குப் பேரவை உருவாக்கம் புலவன்பாடி :** புனித தொன்போஸ்கோ பங்கில் 23.09.2023 அன்று அனைத்து அன்பியங்களை ஒன்றுக்கூட்டி பங்கு பேரவையின் நோக்கம், பேரவை செயல்பாடுகள் பற்றி வேதியர் சாமுவேல் அவர்களால் அன்பிய குழுக்களுக்கு விளக்கப்பட்டது. பின்னர் அன்பியங்கலிருந்து பங்கு பேரவை உறுப்பினர்கள் நியமன உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து தேர்தல் நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட

பங்கு பேரவை தலைவர் செயலர் துணை செயலர் மற்றும் நியமன உறுப்பினர்களுக்கு 01.10.2023 ஞாயிறு திருப்பயில் பங்கு தந்தை அருட்பணி. A. ஜோனாஸ் பிலமின் தாஸ் முன்னிலையில் வேலூர் மறைமாவட்ட ஒழுங்கின்படி மேய்ப்புபணி நிலைய பொறுப்பு இயக்குனர் அருட்பணி. N.T. இருதயராஜ் அவர்களால் பணியேற்பு அளிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்கள் பணிப் பொறுப்பிற்க்கான உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள். திருப்பக்கு பின் தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்களுக்கும் அன்பிய பொறுப்பாளர்களுக்கும் பங்கு பேரவை எவ்வாறு பங்கு தந்தையோடு இணைந்து பங்கு காரியங்களில் செயல்பட வேண்டுமென்பதுப்பற்ற அறிவுறுத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கு பேரவை உறுப்பினர்களுக்கு அருட்பணி N.T. இருதயராஜ் வாழ்த்தும் பாராட்டும் தெரிவித்தார்.

**பீடச்சிறுவர்கள் மாநாடு :** 30.09.2023 - சனிக்கிழமை பெருந்துறைப்பட்டு தூய காணிக்கை அன்னை பங்கில் பீடச்சிறுவர்கள் மாநாடு நடைப்பெற்றது பெருந்துறைப்பட்டு பங்கில் உள்ள பிள்ளைகளின் ஆர்வமும் பங்கேற்பும் பீடச்சிறுவர்கள் அடையாளத்தை குறித்து காட்டவும் இன்னும் பல வழிமுறைகளை கற்றுக்கொள்ளவும் தேவ அழைத்தல் பெருகவும் இம் முயற்சி எடுக்கப்பட்டது. திருவண்ணாமலை மறைகோட்டத்தில் இருக்கின்ற பங்குகள் அல்லிக்கொண்டாபட்டு, பூதமங்கலம், திருமலை, சோமாசிபாடி, தண்டராம்பட்டு, கீழ்பென்னாத்தூர், பவித்திரம், விருதுவிளங்கினான், கீழநாத்தூர், செல்லங்குப்பம், கானங்காடு, தேனிமலை, அந்தோணியார்நகர், தானிப்பாடி, தலையாம்பள்ளம், மேக்களூர், பெருந்துறைப்பட்டு மேலும் பாண்டி, கடலூர் மறைமாவட்ட அருகேயுள்ள பங்கில் மொத்தம் 18 பங்குகலிருந்து 309 சிறார்கள் பங்கெடுத்து பயனடைந்தார்கள்.

**பீடச் சிறுவர்களும் நற்கருணையும்** என்ற தலைப்புகளில் அருட்தந்தை ஜான் ஜோசப் இல்ல தந்தை கீழ்நாத்தூர் அவர்கள் வழி நடத்தினார். மதிய உணவுக்கு பிறகு பிள்ளைகளின் புனித அணி வகுப்பும் தொடர்ந்து வினாடிவினா போட்டி நடைப்பெற்றது பின்னர் செய்முறை பயிற்சி வழங்கப்பட்டது இம்மாநாட்டுக்கு வேலூர் மறைமாவட்டத்தின் மேய்ப்புபணி பொறுப்பு இயக்குனர் அருட்பணி. N.T. இருதயராஜ் தலைமை தாங்கி பிள்ளைகளுக்கு வாழ்த்துக்களையும், சான்றிதழும், பரிசுகளும் வழங்கினார். இம்மாநாட்டுக்கு அருட்தந்தை. ஜெஸ்டின் இல்ல தந்தை, தண்ணீர் பந்தல் அவர்கள் ஆசியுரை வழங்கினார். அருட்தந்தை. அல்போன்ஸ் பங்குதந்தை, காணங்காடு அவர்கள் மாநாட்டை துவக்கி வைத்தார். அருட்தந்தை. ஸ்டீபன் பங்கு தந்தை, கீழ்நாத்தூர், பேரருட்தந்தை ஜான்போஸ்கோ பங்குதந்தை, தலையாம்பள்ளம், அருட்தந்தை அந்தோணிராஜ் பங்குதந்தை மேக்களூர், அவர்கள்

இம்மாநாடு நடத்துகையில் ஒத்துழைப்பு கொடுத்தார்கள். இறுதியில் திருப்பயோடு மாநாடு நிறைவுப் பெற்றது. அருட்தந்தை ட.ஒ. வின்சென்ட் பங்கு தந்தை பெருந்துறைப்பட்டு, பீடச் சிறுவர்களை அனுப்பி வைத்த அனைந்து பங்கு தந்தையர்களுக்கும் உதவி செய்த உபகாரிகளுக்கும் நெஞ்சார்ந்த நன்றி தெரிவித ;தார். மேய்ப்புபணி பொறுப்ப இயக்குனர். அருட்பணி N.T. இருதயராஜ் இம்மாநாட்டை ஒருகிணைத்து வழிநடத்திய அருட்தந்தை P.J. வின்சென்ட் அவர்களை பேரருட்பணி. Msgr. I. ஜான் ராபர்ட் வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் தந்தை சார்பாக பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தார்.

**சென்னை மண்டல் அன்பிய கருத்தரங்கு :** 08.10.2023 சென்னை மண்டல் அன்பிய கருத்தரங்கு செங்கல்ப்பட்டு மறைமாவட்டத்தின் மறைபணி நிலையம் ஆயர் இல்லத்தில் நடைப்பெற்றது. இதில் சென்னை, பாண்டி, செங்கல்பட்டு, வேலூர் ஆகிய மறைமாவட்டத்திருந்து அன்பிய ஒருகிணைப்பாளர்கள் கலந்துக் கொண்டார்கள். வேலூர் மறைமாவட்டத்திருந்து 17 அன்பிய ஒருகிணைப்பாளர்கள் கலந்துக் கொண்டனர். இக்கருத்தரங்கில் 5 தலைப்புகளில் கருத்தாளர்கள் உரையாற்றினார்கள். 1.இந்திய ஜனாநாயகம் எதிர் கொள்ளும் சவால்கள், 2.கூட்டுருங்கிய திருஅவையின் அடித்தளம் அன்பியம், 3.அன்பியத்தின் இன்றைய எதார்த்தங்கள், 4. ஏற்றப்பாதையில் அன்பியங்களின் அனுதினதேவை 5. சமூக கருத்துகளை கூட்டொருங்கியக்கத் திருஅவையின் அடித்தளம் அன்பியம் தலைப்புகளில் மேலும் வேலூர் மறைமாவட்டத்தின் சார்பாக வேதியர் சாமுவேல் சமய கடந்த தோழமையில் சமூகத்தை நோக்கி அன்பியம் என்ற தலைப்பில் உரையாற்றினார். இறுதியாக தமிழக ஆயர் பேரவை தலைவர் செங்கல்ப்பட்டு மறைமாவட்டத்தின் ஆயர்தந்தை மேதகு நீதிநாதன் அவர்கள் வேர்கள் தேடும் அன்பிய விழுமியங்கள் கருத்துரையாற்றி திருப்பலியுடன் நிறைவு செய்தார். தமிழக ஆயர் பேரவையின் செயலர் தந்தை அருட்பணி டான்போஸ்கோ அவர்கள், கருத்தரங்கை ஒருகினைத்த, அருட்பணி யேசு அந்தோணி செங்கலப்பட்டு மேய்ப்புபணி நிலைய இயக்குனர் அவர்களுக்கு வாழ்த்தும் நன்றியும் தெரிவித்தார்.

அன்புள்ள பங்குதந்தையர்களுக்கு,

தமிழக ஆயர்பேரவையின் அன்பியப் பணிக்குழுவால் தரப்பட்ட பங்கு அன்பியம் பற்றிய தரவுகள் (Survey) பூர்த்தி செய்து நவம்பர் மாத இறுதிக்குள் மறைப்பணி மையத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## TNBC Family Counseling Course

திருச்சி அமலா ஆசிரமத்தில் Family Counselling course 13.09.2023 முதல் 21.09.2023 வரை நடைபபெற்றது. எல்லா மறைமாவட்டத்திருந்து பயிற்சியாளர்கள் கலந்துக்கொண்டனர். வேலூர் மறைமாவட்டம் வந்தவாசி பங்கிலிருந்து வேதியர் பிலமின்ராஜ் மற்றும் பத்தியாவரம் பங்கிலிருந்த வேதியர் பன்னீர் செல்வம் இப்பயிற்சியில் கலந்துக் கொண்டனர். இப்பயிற்சியில் இன்றைய காலக்கட்டத்தில குடும்பத்தில் ஏற்படுகின்ற பிளவுகளையும் பிள்ளைகள் வளர்ப்பு பெற்றோர்களின் கவனம், பொறுப்பு போன்ற கருத்துக்கள் வழங்கப்பட்டது. பின்னர் பயிற்சி வினாக்கள் கொடுத்து விளக்கம் அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துக் கொண்டு வேதியர்கள் சான்றிதழும் பெற்றார்கள்.

### நவம்பர் மாத திருமண தயாரிப்பு வகுப்புகள்

04.11.2023 - மாதத்தின் முதல் சனிக்கிழமை.
இடம் - திருவண்ணாமலை உலக மாதா ஆலயம்
நேரம் - காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்

18.11.2023 - மாதத்தின் மூன்றாம் சனிக்கிழமை
இடம் - வேலூர் ஆயர் இல்லம்
நேரம் - காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறும்.

### கிறிஸ்து பிறப்பு மாபெரும் பாடல் போட்டி

பரமனின் பிறப்பினை பண்ணிசைத்து பாடலுடன் பலரையும் பரவசப்படுத்த வேலூர் மறைமாவட்ட அளவில் மாபெரும் பாடல் போட்டி !

வேலூர் மறைமாவட்ட பரிபாலகர் தந்தை பேரருட்பணி Msgr. I. ஜான் ராபர்ட், அவர்கள் தலைமையில் இம்மாபெரும் போட்டியானது நடைபெற உள்ளது. இப்போட்டியில் பங்குப்பெற்று பரிசினைப்பெற அனைத்து பங்கு பாடகற் குழுவினரையும் அன்போடு அழைக்கின்றோம்.

நாள் : 03.12.2023, ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 05.00 மணி
இடம் : சங்கமம் மண்டபம் - வேலூர்

**பங்கேற்பு விதிமுறைகள்**

- பாடகற்குழுவில் பங்கேற்கும் நபர்களின் எண்ணிக்கை குறைந்தது 7 முதல் 12 நபர்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். (இசை கருவிகளை மீட்டுவோர் தவிர்த்து)
- உங்கள் சொந்த இசைக்கருவிகளை எடுத்து வரவேண்டும்.
- **Minus – Track** பயன்படுத்த அனுமதியில்லை
- நடுவரின் தீர்ப்பே இறுதி தீர்ப்பு.
- தேர்வு செய்யப்படும் சிறந்த பாடகற் குழுவினருக்கான பரிசுகளின் விவரம்
  - முதல் பரிசு ரூபாய் 10,000/-
  - இரண்டாவது பரிசு ரூபாய் 7.000/-
  - மூன்றாவது பரிசு ரூபாய் 5,000/-

பின்குறிப்பு : போட்டியில் பங்கேற்கும் பங்குகளின் விவரமும் பாடலும் 18.11.2023-க்குள் அருட்பணி **N.T.** இருதயராஜ், மேய்ப்புபணி பொறுப்பு இயக்குனர், அவர்களுக்கு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (அலைபேசி : 9751122773)

**மறைக்கல்வி - நன்னெறி பாடங்கள் ஆய்வுக்கான**
**கால அட்டவணை**
**வேலூர் & அரக்கோணம் மறைவட்டங்கள் 2023 - 2024**

அன்புள்ள தாளாளர், தலைமை ஆசிரியர், இருபால் ஆசிரியர் பெருமக்களுக்கு மேய்ப்புப்பணி நிலையத்திலிருந்து நல்வாழ்த்துகள். மறைக்கல்வி, நன்னெறி பணியில் நீங்கள் செய்யும் எல்லா சேவைகளுக்காகவும் உங்களை பாராட்டுகிறேன். இவ்வாண்டு உங்கள் பள்ளியில் மறைக்கல்வி, நன்னெறி பாடங்களை ஆய்வு செய்ய கீழக்கண்ட தேதியில் அருட்பணி **N.T.** இருதயராஜ் தலைமையில் மறைமாவட்ட மறைக்கல்வி பணிக்குழு வருகின்றது என்பதை இந்த சுற்றறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களின் மேலான வரவேற்பை மறைக்கல்வி பிள்ளைகளுக்கு உதவும் வகையில் காணிக்கையாக தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் | வேளை | பார்வையிடும் பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 16.10.2023<br>திங்கள்கிழமை | காலை | 1. புனித மரியன்னை பெண்கள் மேனிலைப்பள்ளி, வேலூர்<br>2. புனித மரியன்னை தொடக்கப்பள்ளி - வேலூர்<br>3. புனித மரியன்னை ஆங்கில பள்ளி - வேலூர் |
| | பிற்பகல் | 1. புனித டான்போஸ்கோ உயர் நிலைப்பள்ளி - வேலூர்<br>2. புனித டான்போஸ்கோ தொடக்கப்பள்ளி - வேலூர்<br>3. புனித சாவியோ மெட்ரிக்பள்ளி - வேலூர் |
| 17.10.2023<br>செவ்வாய்கிழமை | காலை | 1. புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி - வேப்பூர்<br>2. சிநேக தீபம் மெட்ரிக் பள்ளி - அலுமேலுரங்காபுரம் |
| | பிற்பகல் | 1. திருச்சிலுவை மெட்ரிக் பள்ளி - சத்துவாச்சாரி<br>2. உத்திரியமாதா நடுநிலைப்பள்ளி, ஓல்டு டவுன்<br>3. ஆரோக்கியமாதா ஆங்கில பள்ளி, ஓல்டு டவுன் |
| 18.10.2023<br>புதன்கிழமை | காலை | 1. குளுனி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, காட்பாடி<br>2. புனித சேவியர் உயர் நிலைப்பள்ளி, கிறிஸ்டியான்பேட்டை<br>3. புனித சேவியர் தொடக்கப்பள்ளி, கிறிஸ்டியான்ப்பேட்டை |
| 19.10.2023<br>வியாழக்கிழமை | காலை | 1. புனித ஜோசப் உயர்நிலைப்பள்ளி, அ.கட்டுபடி<br>2. புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, அ.கட்டுபடி<br>3. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, கணியம்பாடி<br>4. குழந்தை யேசு மெட்ரிக் பள்ளி, இடையான்சாத்து |
| | பிற்பகல் | 1. புனித டான்போஸ்கோ ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, காந்தி நகர்<br>2. புனித டான்போஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, காந்திநகர் |
| 20.10.2023<br>வெள்ளிக்கிழமை | காலை | 1. அக்ஸிலியம் பெண்கள் மேல் நிலைப்பள்ளி, காந்திநகர்<br>2. அக்ஸிலியம் தொடக்கப்பள்ளி, காந்திநகர்<br>3. அக்ஸிலியம் ஆங்கில தொடக்கப்பள்ளி, காந்திநகர் |
| 26.10.2023<br>வியாழக்கிழமை | காலை | 1. புனித சிறுமலர் பெண்கள் மேனிலைப்பள்ளி, இராணிப்பேட்டை<br>2. புனித சிறுமலர் தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, இராணிப்பேட்டை<br>4. புனித தோமா ஆங்கிலப்பள்ளி, சிப்காட் |
| 27.10.2023<br>வெள்ளிக்கிழமை | காலை | 1. தூய நெஞ்ச மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, அரக்கோணம்<br>2. ஆர்.சி.எம். உயர்நிலைப்பள்ளி, பழனிப்பேட்டை<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பழனிப்பேட்டை |
| | பிற்பகல் | 1. தொன்போஸ்கோ மேனிலைப்பள்ளி, சகாயத்தோட்டம்<br>2. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, உரியூர்குப்பம். |

| | | |
|---|---|---|
| 30.10.2023<br>திங்கள்கிழமை | காலை | 1. புனித சிறுமலர் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, அம்மூர்<br>2. அன். மரியா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, காவேரிப்பாக்கம் |
| | பிற்பகல் | 1. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, ஆலப்பாக்கம்<br>2. இருதய ஆண்டவர். உயர்நிலைப்பள்ளி, செங்கநாத்தம் |

**போளூர், வேட்டவலம், திருவண்ணாமலை மறைவட்டங்கள்**
**2023 - 2024**

| நாள் | வேளை | பார்வையிடும் பள்ளியின் பெயர் |
|---|---|---|
| 31.10.2023<br>செவ்வாய்கிழமை | காலை | 1. புனித தொன்போஸ்கோ மேல்நிலைப்பள்ளி, போளூர்<br>2. புனித ஜோசப் ஆர்.சி.எம ;. தொடக்கப்பள்ளி, போளூர்<br>3. அக்ஸிலியம் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, போளூர் |
| | பிற்பகல் | 1. தூய நெஞ்ச தொடக்கப்பள்ளி, போளூர்<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, இரண்டரிப்பட்டு<br>3. ஆர்.சி.எம். தொடக்கபள்ளி, சந்தவாசல் |
| 01.11.2023<br>புதன்கிழமை | காலை | 1. இம்மாகுலேட் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, காரியந்தல்<br>2. புனித ஜோசப் மேனிலைப்பள்ளி - சி. நம்மியந்தல்<br>3. புனித ஜோசப் தொடக்கப்பள்ளி, சி. நம்மியந்தல் |
| | பிற்பகல் | 1. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, கொரட்டாம்பட்டு<br>2. ஆர்சி.எம். தொடக்கப்பள்ளி, திருமலை<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, வடமாதிமங்களம் |
| 06.11.2023<br>திங்கட்கிழமை | காலை | 1. புனித மரியன்னை ஆண்கள் மேனிலைப்பள்ளி, வேட்டவலம்<br>2. புனித மரியன்னை தொடக்கப்பள்ளி, வேட்டவலம்<br>3. புனித ஆலோசியஸ் ஆங்கிலப்பள்ளி, வேட்டவலம் |
| | பிற்பகல் | 1. புனித ஆலோசியஸ் பெண்கள் மேனிலைப்பள்ளி, வேட்டவலம்<br>2. புனித ஆலோசியஸ் தொடக்கப்பள்ளி, வேட்டவலம் |
| 07.11.2023<br>செவ்வாய்கிழமை | காலை | 1. தூய நெஞ்ச மெட்ரிக் மேனிலைப்பள்ளி, ஆவூர்<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, ஆவூர்<br>3. புனித சேவியர் உயர்நிலைப்பள்ளி, ஜமீன் கூடலூர் |
| | பிற்பகல் | 1. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, ஜமீன் கூடலூர்<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, சாணிப்பூண்டி |

| | | |
|---|---|---|
| 08.11.2023 புதன்கிழமை | காலை | 1. மௌன்ட் சென்ட் ஜோசப் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருவண்ணாமலை<br>2. புனித சேவியர் உயர்நிலைப்பள்ளி, கீழ்நாத்தூர்<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, கீழ்நாத்தூர் |
| | பிற்பகல் | 1. செயின்ட் பால்ஸ் உயர்நிலைப்பள்ளி, கெங்கப்பட்டு<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, கெங்கப்பட்டு<br>3. புனித திரேசா உயர்நிலைப்பள்ளி, மதுராம்பட்டு<br>4. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, மதுராமப்பட்டு |
| 09.11.2023 | காலை | 1. புனித அந்தோணியார் உயர்நிலைப்பள்ளி, விருதுவிளங்கினான்<br>2. புனித அந்தோணியார் ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, விருதுவிளங்கினான் |
| | பிற்பகல் | 1. புனித லூர்து அன்னை மெடரிக் மேனிலைப்பள்ளி, தண்டராம்பட்டு<br>2. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, தாணிப்பாடி<br>3. கிறிஸ்து ஜோதி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, தாணிப்பாடி |
| 10.11.2023 வெள்ளிக்கிழமை | காலை | 1. புனித கார்மேல் மேனிலைப்பள்ளி, இளையாங்கன்னி<br>2. ஆ.சி.எம். தொடக்கப்பள்ளி, இளையாங்கன்னி<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பெருந்துரைப்பட்டு |
| | பிற்பகல் | 1. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, அல்லிக்கொண்டாப்பட்டு<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பெருமனம் |
| 17.11.2023 வெள்ளிக்கிழமை | காலை | 1. புனித சகாய அன்னை ஆண்கள் மேனிலைப்பள்ளி, பவித்திரம்<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, பவித்திரம்<br>3. புனித அந்தோணியார் பெண்கள் மேனிலைப்பள்ளி, பவித்திரம் |
| | பிற்பகல் | 1. ஆர்.சி.எம். நடுநிலைப்பள்ளி, பூதமங்கலம்<br>2. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, ஆர்ப்பாக்கம்<br>3. ஆர்.சி.எம். தொடக்கப்பள்ளி, அரும்பாக்கம். |

இறைபணியில் அன்புடன்
அருட்பணி **N.T.இருதயராஜ்**
பொறுப்பு, மேய்ப்புப்பணி நிலையம். வேலூர்

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

**வேலூர் மத்தியசபை கூட்டம் (24.09.2023)**

24.09.2023 ஞாயிறு காலை 11.00 மணியளவில் மத்திய சபைத்தலைவர் சகோ. ம. சார்லஸ் ஆரோக்கியராஜ் தலைமையில், மூத்த தலைவர்கள் அ.பெரியநாயகம், அ.தோமினிக் முன்னிலையில் நடைபெற்றது. வட்டாரசபைத் தலைவர்கள் மரிய ஆண்டனி ஜான்சன் போளூர், ஜேசுதாஸ் சேத்பட், காட்பாடி செபஸ்டின் இருதயராஜ், திருப்பத்தூர் பிரிட்டோ சுரேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

மேலும் மத்தியசபைச் செயலர் சா.அந்தோணிராஜ், ஒய்.டி.மூர்த்தி, வந்தவாசி லூர்துசாமி, திலீப் ஆனந் ஆகியோரும் கலந்து கொண்டு ஆண்டு விழாவுக்கான ஆலோசனைகளை வழங்கினர்.

கல்வி உதவித்தொகை HES TVTS வித்தியஜோதி கல்வி உதவிப்படிவங்கள் அக்டோபர் இறுதிக்குள் பூர்த்தி செய்து அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டது. வேலூர் மத்தியசபை சார்பாக, மணிப்பூர் மாநில மக்களுக்காக ரூ.1,15,230/- இந்திய தேசிய சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டது மற்றும் மத்தியசபையின் புதிய பொறுப்பாளர்கள் பட்டியல் பற்றி மத்திய சபை தலைவர் ம. சார்லஸ் ஆரோக்கியராஜ் தெரிவித்தார்.

வட்டார சபைத்தலைவர்களின் பணிக்காலம் முடிந்த தலைவர்கள் விரைவில் பணிப்பொறுப்பிலிருந்து விடுவிக்கும் கடிதம் வழங்கிட கேட்டுக்கொண்டார். சகோ அ.தோமினிக். மேலும், மத்திய சபை துணைத்தலைவர் எஸ்.பெரியநாயகம் இந்திய தேசிய சபையின் AGM கூட்டத்தில் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை எடுத்துக் கூறினார். மேலும் மத்தியசபை ஆண்டு விழாவில் கிளைச்சபையின் சார்பில் 5 உறுப்பினர்களாவது கலந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அன்றைய இரகசிய பை வசூல் ரூ.510/-.

கூட்டத்தின் இறுதியில் வேட்டவலம் பிரான்சிஸ் தாயாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் இரங்கல் தெரிவித்து செபிக்கப்பட்டது.

புனித வின்சென்ட் தே பவுல் திருவிழா (27.09.2023)

1) கணியம்பாடி திரு இருதய ஆண்டவர் கிளைச்சபை சார்பில் பங்குதந்தை **S.**டேனியல் அடிகளார் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, அதைத் தொடந்து இனிப்பும், மாலை சிற்றுண்டியும் வழங்கப்பட்டது. மறுநாள் காலை 10.00 மணியளவில் மத்திய சபைத் தலைவர் சகோ. ம.சார்லஸ் ஆரோக்கியராஜ் முன்னிலையில் 30 ஏழை எளிய தேவையில் உள்ளவர்களுக்கு புடவைகள் வழங்கப்பட்டன.

2) வின்சென்ட் தே பவுல் திருவிழாவினை முன்னிட்டு திருமதி டெரின்மேரி மற்றும் மத்தியசபைத் தலைவர் சகோ. ம.சார்லஸ் ஆரோக்கியராஜ் முன்னிலையில் உத்தரியமாதா நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு 10 பேருக்கு ரூ.4500/- மதிப்பில் புதிய சீருடைகள் வாங்கிகொடுக்கப்பட்டது.

3) பெருமனம் - கிறிஸ்து அரசர் கிளைச்சபை சார்பில் ஏழை எளிய தேவையில் உள்ளவர்களுக்கு, பங்குத்தந்தை S.A.ஞானசேகர் தலைமையில் கிளைச்சபை தலைவர் P.பெஞ்சமின் முன்னிலையில் வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டது.

திருப்பத்தூர் பிரான்சிஸ் சேவியர் கிளைச்சபை (14.10.2023) :

14.10.2023, திருப்பத்தூர் ஜோலார்பேட்டை புனித ஜெயராக்கினி ஆலயம், புனித பிரான்சிஸ் சேவியர் கிளைச்சபை சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. பங்குத்தந்தை அருள்திரு பிரான்சிஸ் சேவியர் sdb பக்த சபைகளின் இயக்குநர் ஜெ.ஜெயப்பிரகாஷ், வேலூர் மத்தியசபைத் தலைவர் ம.சார்லஸ் ஆரோக்கியராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். திருப்பத்தூர் வட்டாரசபைத் தலைவர் சகோ. பிரிட்டோ சுரேஷ்

முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிளைச்சபை மேலும் சிறப்பாக நடைபெற ஆலோசனைகள் வழங்கப்பட்டது. கிளைச்சபைத் தலைவர் சகோ. மோகன்ராஜ் மற்றும் 10 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பின்னர், 3 தந்தையர்களின் கூட்டுத் திருப்பலி ஜெ.ஜெயப்பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

வேலூர் மத்திய சபைக் கூட்டம் (15.10.2023) :

15.10.2023 ஞாயிறு மாலை 3.30 மணியளவில் வேலூர் மத்தியசபைக் கூட்டம் கூட்டப்பட்டது. 8 வட்டாரசபைத் தலைவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மறைமாவட்ட பரிபாலகர் தந்தை ஐ.ஜான் ராபர்ட் அடிகளார் தலைமையில் பக்த சபைகளின் இயக்குநர் தந்தை ஜெ.ஜெயப்பிரகாசம் அடிகளாரின் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. ஆண்டு விழாவை எங்கு வைக்கலாம் என பேசப்பட்டது. ஒவ்வொரு கிளைச்சபையிலிருந்தும் குறைந்தது 5 நபர்களாவது கலந்துகொள்ள அழைப்பு விடப்பட்டது. ஆண்டுவிழா தயாரிப்புக் கூட்டம் மற்றும் அழைப்பிதழ் தயாரித்தல், போட்டிகள் நடத்திடவும் (விவிலிய மற்றும் கையேடு) திட்டமிடப்பட்டது. 6.00 மணியளவில் கூட்டம் முடிவுற்றது.

பேரருள்பணி. ஜெ.ஜெயபிரகாஷ்
இயக்குநர்
பக்த சபைகள் - வேலூர்.

சகோ. ம.சார்லஸ் ஆரோக்கியராஜ்
தலைவர்
வேலூர் மத்தியசபை

## மரியாயின் சேனை

8.10.23 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில், ஆற்காடு புனித அந்தோனியார் ஆலய அருட்பணி. இருதயராஜ் அடிகளார் தலைமையிலும், பக்தசபை இயக்குனர் அருட்பணி ஜெயபிரகாசம் அவர்களின் முன்னிலையிலும் கொமித்சிய பொறுப்பாளர்களோடு அப்பங்கின் பெண்கள் பிரசீடியம் புதுப்பிக்கப்பட்டது. மொத்தம் 22

பேர் உறுப்பினர்களாக சேர்ந்தனர். திருப்பலிக்குப் பின் புதுப்பித்தல் கூட்டம் தூய சங்கீதம் முழங்க இரு தந்தையர்களின் வாழ்த்து ஜெபத்துடன் ஆரம்பித்தது. இதில் பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் பொறுப்புகள், கடமைகள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி தந்தை ஜெயபிரகாசம் மற்றும் கொமித்சிய அலுவலர்கள் ரத்தினாமேரி, ஜெசிந்தா மேரி அவர்களாலும் விரிவாக எடுத்து கூறி முக்கிய ஆவணங்கள் வழங்கப்பட்டு, இறுதி ஜெபம் குருக்களின் ஆசிரோடு காலை 11.15 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

14.10.23 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் திருப்பத்தூர் கியூரியாவின் ஜோலார்பேட்டை பங்கில் அருட்பணி பிரான்சீஸ் ஜேவியர் தலைமையிலும் பேரருட்பணி ஜெயபிரகாசம், முன்னிலையிலும் ஜோலார்பேட்டை மற்றும் அதன் கிளைப்பங்குகளிலும் இருந்து சேனையாளரை சந்தித்து அவர்கள் ஆற்றிய சேனைப்பணிகளின் அறிக்கை வருகை பதிவேடு, (இ.பை.வசூல்) பொருளர் அறிக்கை ஆய்வு கொமித்சிய தலைவர்களால் சரிபார்க்கப்பட்டு, செய்ய தவறிய கடமைகள் சேனை ஒழுங்கு முறைகளை விளக்கி கூறப்பட்டபின் தந்தை ஜெயபிரகாசம் அவர்களின் அறிவுறுத்தலின்படி இனிவரும் காலங்களில் சேனையை நடத்த ஒப்புதல் அளித்தனர். பின் ஜெயராக்கினி அன்னை ஆலயத்தில் திருப்பலி தந்தையர்களால் நிறைவேற்றியப்பின் மாலை 8.00 மணிக்கு நிறைவுற்றது. வருகைதந்த அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. மொத்தம் 20 பேர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

நன்றி.

இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சகோ. ரத்னாமேரி**
கொமித்சிய தலைவி, வேலூர்

## BIRTHDAY

| | | |
|---|---|---|
| 1 | Fr. B.Edwin Savariyappa | 05-11-1980 |
| 2 | Fr. Y.Arockiasamy | 08-11-1958 |
| 3 | Fr. S.Irudayaraj | 08-11-1973 |
| 4 | Fr. S.John Bosco | 09-11-1949 |
| 5 | Fr.S.Anbalagan | 18-11-1980 |
| 6 | Fr. I.Jeevagan | 19-11-1985 |
| 7 | Fr. S.Lua Thomas | 25-11-1978 |
| 8 | Fr. S.Richard Pereira | 25-11-1978 |

## NECROLOGY

| | | |
|---|---|---|
| 1 | Rev. Fr. George Paetta SDB | 02.11.1978 |
| 2 | Rev. Fr. Jesurathinam | 05.11.1995 |
| 3 | Rev. Fr. Stephen Bernard SDB | 07.11.1997 |
| 4 | Rev. Fr. Thomas Selvam SDB | 08.11.1973 |
| 5 | Rev. Fr. George SDB | 09.11.1976 |
| 6 | Rev. Fr. Victor SDB | 10.11.1960 |
| 7 | Rev. Fr. Joseph Murphy SDB | 14.11.1971 |
| 8 | Rev. Fr. Francis Ardusso SDB | 14.11.1994 |
| 9 | Rev. Fr. Joseph SJ | 17.11.1961 |
| 10 | Rev. Fr. S. Velankanni | 20.11.1982 |
| 11 | Rev. Fr. Amirthanathan | 22.11.1996 |
| 12 | Rev. Fr. Joseph Koorkamattam | 23.11.1953 |
| 13 | Rev. Fr. Ignatius Muthu SDB | 23.11.1967 |
| 14 | Rev. Fr. R. Susai Regis | 24.11.2020 |
| 15 | Rev. Bro. Thomas SHJ | 25.11.1981 |

**HOLY FATHER'S INTENTION: For the POPE**

We pray for the Holy Father; as he fulfills his mission, may he continue to accompany the flock entrusted to him, with the help of the Holy Spirit.

**CALENDER**

| | | |
|---|---|---|
| 1 | Wed | All Saints Day, Sol |
| 2 | Thu | All Souls Day |
| 4 | Sat | St. Charles Borromeo Bp., Mem |
| 5 | Sun | 31 st Ordinary Sunday |
| 9 | Thu | The Dedication of the Lateran Basilica in Rome, Feast |
| 10 | Fri | St. Leo The Great Pp., Dr. Mem |
| 11 | Sat | St. Martin of Tours Bp., Mem |
| 12 | Sun | 32nd Ordinary Sunday |
| 13 | Mon | St. Francis Xavier Cabrini, Vir, Mem |
| 15 | Wed | St. Albert the Great, Bp., Rl. Dr |
| 17 | Fri | St. Elizabeth of Hungary Rel., Mem |
| 19 | Sun | 33rd Ordinary Sunday |
| 21 | Tue | The Presentation of the B.V.M., Mem |
| 22 | Wed | St. Cecilia, Vir, Mr, Mem |
| 23 | Thu | St. Clement, Pp, Mr |
| 24 | Fri | St. Andrew Dung Lac Pr., & Companions, Mr |
| 26 | Sun | Our Lord Jesus Christ, King of the Universe, Sol |
| 30 | Thu | St. Andrew, Ap., Feast |

**RIP**

In your Charity Kindly pray for Rev. Fr. A.L. Jesuraj, The Parish Priest of Our Lady of Fatima Church, Semmiamangalam passed away on 22.10.2023. Let His Soul Rest in Peace.

# *PRAYER FOR ALL SOULS DAY*

*Merciful Father;*
*hear our prayer and console us.*
*As we renew*
*our faith in Your Son,*
*Whom you raised from the dead,*
*strengthen our hope*
*that all our departed brothers and*
*sisters will share in His resurrection,*
*who lives and reigns*
*with You and the Holy Spirit,*
*one God, for ever and ever.*
*Amen.*

